# கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்!

## கிறிஸ்துமஸ் வாழ்த்து 24-12-2017

அன்பின் வழியது உயிர் நிலை!
ஆன்ற பண்பின் வழியது வாழ்க்கை!
இன்பம் செய்வது மனமே - நல்ல
ஈகை குணமே காட்டும் இறைமை!
உண்மை அறிவே கடவுளின் நிலையாம்!
ஊஞ்சல் போலே மனத்தை ஆளுங்கள்!
எங்கும் நிறைந்து அன்பைத் தூவுங்கள்!
ஏசுவின் வழியில் மாணுடம் பேணுங்கள்!
ஐயம் நீங்கி என்றும் வாழுங்கள்!
ஒப்பிலா இறைமை உள்மனம் காணும்!
ஓங்குயர் நிறைவே கடவுளைக் காட்டும்!

அனைவருக்கும்
**கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!**

## கிறிஸ்துமஸ் வாழ்த்து 25-12-2018

அன்பே வாழ்வின் பெரும் கலனாம்!
**ஆண்டவர்** வழியில் தேடிடுங்கள்!
இன்பம் தானே தினம் சூழ,
ஈடில்லாப் பெருமைகள் வந்தடையும்!
அனைவருக்கும் இனிய
**கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!**

## கிறிஸ்துமஸ் வாழ்த்து

அன்பினைச் சொல்ல வந்தார்,
அருளினால் நிறைந்த மகான்!
மன்னவன் இறைவன் தன்னின்,
மருவிலா மகனே என்பார்!
என்நாளும் மனத்தில் அவரை,
இருத்தியே மகிழ்ந்து நிறைந்து;
அன்னவன் வழியில் இறைதேடும்,
அனைவருக்கும் **கிறிஸ்துமஸ் வாழ்த்து!**
(24 -12-2019)

## கிறிஸ்துமஸ் வாழ்த்து!

மண்ணிலே ஓர் மாமனிதர் வந்துதித்தார்;
மக்கள் நலம் தேடல் வேண்டி!
அன்பின் வழியது உயிர்நிலை யென்னும்,
ஆன்றநல் வழிசொன்னார்!
புண்ணிய மனிதர் தாமவரோ,
இறையாய் மகனாய் நிறைந்து,
எண்ணிய வழியில் அருள்தருவார்!
மண்டிய சிறுமைகள் தகர்தெறிந்து,
மானுடம் தழைக்க வழிசொன்னார்!
அன்னவர் பிறந்த நாளின்று,
அணைப்பவர் தம்மை வாழ்த்திடுவோம்!

அன்புடன்,
**கு.ப.அசோகன் . (கவிவளவன்) 25-12-2020**

## கிறிஸ்துமஸ் வாழ்த்து! 25-12-2021

மண்ணில் மாந்தரை மருவிலாது காக்க,
எண்ணிய இறைவன் இயம்பிய வழிகள்;
திண்ணிய மாந்தரின் மனத்தில் வளர்ந்து,
நன்னெறி புகட்டும் மதங்கள் ஆகிட,
தன்னிலை யுணர்ந்து, தகைமை செய்தோர்,
முன்னிலை அடைந்து அருளாளர் ஆகிட,
இறையின் மகனாய் எழுந்த தூதனாய்,
இயன்ற அறிவாய் உணர்ந்ததை விளம்பி,
இயன்நிலை வாழ்வில் இன்னலைக் துறக்க,
அறிவாய் மனமாய் ஆக்கிய நிலையே,
இறைவன் என்றே அறிந்து கொண்டோம்!
அன்பைச் சொல்லி, அன்பால் நிறைந்த,
அன்னவன் இறையின் ஆன்ற மகனாய்,
தன்னுயிர் ஈந்து மக்களைக் காத்த,
அன்னவராம் **ஏசுபிரான்**, வந்துதித்த,
நன்நாளாம் இதனில், அவர்வழி வாழும்,
அன்பர் யாவருக்கும் **கிறிஸ்துமஸ் வாழ்த்து!**

அன்புடன்,
**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**